# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்)
## (திருத்தம்)

***1944 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்களால் 2022, ஒகத்து மாதம் 31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, ஒகத்து மாதம் 22 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***148 ஆம் சட்டமூலம்*** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

### 1944 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

முன்னுரை

1991 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1944 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, சிலோன் பெப்டிஸ்ட் பேரவைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட சிலோன் பெப்டிஸ்ட் பேரவை என முன்னர் குறிப்பிடப்பட்ட ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கத்தின் உறுப்பினர்கள் சங்கத்தின் பெயரை மாற்றுவதற்கான தீர்மான மொன்றை நிறைவேற்றியுள்ளனர்.

சொல்லப்பட்ட சங்கம் அத்தகைய தீர்மானத்திற்கு பயன்கொடுப்ப தற்காக அத்தகைய சங்கத்தின் பெயரை மாற்றுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதிப்பதற்கு அது தகுதியானதாக விருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா பெப்படிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1991 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்திற்கான பொதுத் திருத்தங்கள்

**2.** 1991 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டத்தில் ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் எனக் குறிப்பிடப்படும்) (அப்பெயரினாலும் சரி அல்லது ‘‘சங்கம்’’ வின் குறும்பதத்தினாலும் சரி) சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும் அல்லது அச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில் அல்லது வேறு ஆவணத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி ‘‘ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம்’’ என்னும் சொல்லமைப்பிற்கும் ‘‘சங்கம்’’ என்னும் சொல்லமைப்புக்கும் பதிலாக, ‘‘ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் திருச்சபை’’ அல்லது ‘‘திருச்சபை’’ என்னும் சொற்களும் இடப்படுதல் வேண்டும்.

*ஒப்பந்தங்களுக்கான பேணல்கள்*

**3**. அச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் "ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கத்தினால்" அல்லது அதற்குச் சாதகமாக ஆக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட எத்தன்மையானதுமான எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் அல்லது வேறுசாசனங்களும் அல்லது ஆவணங்களும் அச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன்பின்னர் "ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் திருச்சபை" அல்லது அதற்குச் சாதகமாக ஆக்கப்படவுள்ளதாக, வழங்கப்படவுள்ளதாக, அல்லது நிறைவேற்றப்படவுள்ளதாக அல்லது ஆக்கப்பட்டுள்ளதாக, வழங்கப்பட்டுள்ளதாக அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.